ராஜ்யசபை ஒத்திவைப்பு தலைவர் திடீர் அறிவிப்பு

புதுடில்லி: ராஜ்யசபை கூட்டத்தொடர் நேற்று டன் முடிவடைந்தது. மார்ச் 17 மற்றும் 18ந்தேதியும் நடைபெறுவதாக இருந்தது. திடீரென்று ராஜ்யசபைத் தலைவர் அமீத் அன்சாரி ஏப்ரல் 14ந்தேதி வரை ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார்.

ஏற்கெனவே அறிவித்தபடி நாடாளுமன்றம் கூட்டத்தொடர் நேற்றுடன் முடிவடைந்தது மீண்டும் ஏப்ரல் 12ந்தேதி கூடுகிறது. நாடாளுமன்ற இருஅவைகளும் 2010-11ம் ஆண்டிற்கான மத்திய அரசின் பட்ஜெட்டை நிறைவேற்றியது. இரு அவைகளும் பிப்ரவரி 22ந்தேதி தொடங்கியது.

விண்வெளி ஆராய்ச்சி நிலையம் மீது அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கி சூடு

பெங்களூர்: விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் கிளை அலுவலகமான இந்தியன் விண்வெளி ஆராய்ச்சி நெட்வொர்க் ஆலுவலகத்தில் பாதுகாப்பு பணியிலிருந்த மத்திய பாதுகாப்பு படையினர் மீது அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கியால் சுட்டனர். பாதுகாப்பு படையினரும் திருப்பிச் சுட்டனர்.

பெங்களூரிலிருந்து 45 கி.மீ. தூரத்தில் உள்ள மகதி என்ற இடத்தில் இந்த அலுவலகம் உள்ளது. அதிகாலையில் அடையாளம் தெரியாத இரண்டு பேர் பைனாகுலர் உதவியுடன் இந்த அலுவலகத்தின் மீது நோட்டம் விட்டனர். பிறகு பாதுகாப்பு பணியிலிருந்த மத்திய பாதுகாப்பு படையினரும் திருப்பிச் சுட்டனர். அவர்கள் இருவரும் இருட்டில் ஓடி தப்பிவிட்டனர்.

ரூ.9 கோடியில் பிற்படுத்தப்பட்டோருக்கு கல்வி உதவித் தொகை

புதுடில்லி: இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மெட்ரிக்குலேஷனுக்கு மேற்பட்ட கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டுக்கு நடப்பு 2009-10-ம் ஆண்டில் இம்மாதம் 10-ம் தேதி வரை ரூ.7.66 கோடி நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2006-07-ம் ஆண்டில் ரூ.5 கோடியும், 2007-08-ம் ஆண்டில் ரூ.10.99 கோடியும், 2008-09-ம் ஆண்டில் ரூ14.85 கோடியும் அனுமதிக்கப்பட்டது.

இதே போல இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மெட்ரிக்குலேஷனுக்கு உட்பட்ட கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் நடப்பு 2009-10-ம் ஆண்டில் இம்மாதம் 10-ம் தேதி வரை தமிழ்நாட்டுக்கு ரூ1.64 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2006-07-ம் ஆண்டில் ரூ.4 கோடியும், 2007-08-ம் ஆண்டில் ரூ.1.50 கோடியும், 2008-09-ம் ஆண்டில் ஒரு கோடி ரூபாயும் அனுமதிக்கப்பட்டது.

இத்தகவல்களை மக்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலமாக அளித்த பதிலில் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமயமாக்கல் துறை இணை அமைச்சர் டி.நெப்போலியன் தெரிவித்தார்.

10 கோடியைத் தாண்டிய ரிலையன்ஸ் செல்பேசி இணைப்புகள்

மும்பை: ரிலையன்ஸ் நிறுவனம் தங்களது வாடிக்கையாளர் எண்ணிக்கை 10 கோடியைத் தாண்டி விட்டதாக அறிவித்துள்ளது. இதன்மூலம் செல்பேசி சேவையளிக்கும் நாட்டின் இரண்டாவது பெரிய நிறுவனமாக இது உயர்ந்துள்ளது.

அதேபோன்று ஒரே நாட்டில் 10 கோடிக்குமேல் சேவை அளிக்கும் உலகின் நிறுவனங்களில் நான்காவதாக ரிலையன்ஸ் உள்ளது. செய்தியாளர்களிடம் நிறுவனத் தலைவர் அனில் அம்பானி, அடுத்த 1000 நாட்களில் மேலும் 10 கோடி வாடிக்கையாளர்களைப் பெற இலக்கு கொண்டுள்ளதாக தெரிவித்தார். மேலும் அக்கட்ட வரிசை இணையதளச் சேவையை தங்களுடைய செல்பேசி அடுத்த 100 நாட்களுக்குள் 60 நாட்களுக்குமேல் விரிவாக்க உள்ளதாக அவர் கூறினார்.

'பேஸ்புக்' இணையதள மையம் ஐதராபாத்தில் துவக்கம்

ஐதராபாத்: உலகப் புகழ் பெற்ற இணையதளமான 'பேஸ்புக்' ஐதராபாத்தில் இந்தியாவில் முதல்முறையாக தனது புதிய அலுவலகத்தை திறக்கவுள்ளது. உலகத்தரம் வாய்ந்த ஒரு குழுவுடன் அது பயனாளிகள், விளம்பரதாரர்கள் மற்றும் மென்பொருள் உருவாக்குவோருக்கு உதவ உள்ளது.

தற்போழுது இந்தியாவில் 9 லட்சம் பேர் உலகம் முழுவதும் உள்ள தங்களது நண்பர்கள் குடும்பத்தினர் ஆகியோருடன் 'பேஸ்புக்' மூலம் தொடர்பு கொண்டு வருகின்றனர். உலகம் முழுவதும் இந்நிறுவனத்திற்கு 40 கோடி வாடிக்கையாளர்கள் உள்ளனர். செய்தியாளர்களிடம் பேசிய பேஸ் புக் இயக்குனர் டான் பவல் இதுபோன்ற பல்வகை ஆதரவு மையங்கள் நிறுவுவதன் மூலம் பல்வேறு நாடுகளின் காலமாற்றங்களுக்கு ஏற்ப 24 மணி நேரமும் பயனாளிகள் பயன்படுத்தலாம் என்று கூறினார்.

பேஸ் புக் மூலம் இந்தியா மற்றும் உலகம் முழுவதும் தேசியப் பிரச்சனைகள் மற்றும் விளையாட்டுச் செய்திகள் பற்றிய தங்களது கருத்துக்களை வெளியிட்டு புகைப்படங்களையும் மக்கள் பகிர்ந்து கொள்வதாக அவர் கூறினார்.

அரசு தனியார் பங்கேற்பு திட்ட விதிகளில் மாற்றம்: ஜி.கே.வாசன்

புதுடில்லி: நாட்டில் முக்கியத் துறைமுகங்களில் மேற்கொள்ளப்படும் அரசு, தனியார் பங்கேற்பு திட்ட வழிகாட்டல் விதிகளில் மாற்றம் ஏற்படுத்த அரசு ஆலோசித்து வருவதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் ஒரு ஐக்கிய ஜனதா தள உறுப்பினர் என்.கே.சிங் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர் இதன்மூலம் தனியார் துறையினர் அதிகளவில் ஈடுபட வாய்ப்புள்ளதாகத் தெரிவித்தார். மாற்றத்துக்கு உள்ளாகும் விதிமுறைகளால் சிலர் மட்டும் ஏகபோக உரிமை கொள்ளக்கூடும் என்ற கருத்தை அவர் மறுத்தார். மாறாக இதன் மூலம் பெரும் அளவிலான தனியார் துறையும் அரசும் இணைந்து திட்டங்களில் பங்கேற்பார்கள் என்று கூறினார்.



சட்டமன்றங்களில் பெண் உறுப்பினர்கள் 8 சதவீதத்திற்கும் குறைவு

புதுடில்லி: நாட்டின் 28 மாநில சட்டமன்றங்களில் உள்ள 4030 உறுப்பினர்களில் 311 பேர் மட்டுமே பெண்கள் என்று தகவல் அறிக்கை கூறுகிறது. 60 பேர் உள்ள நாகாலாந்து அவையில் ஒரு பெண் கூட இல்லை. முதல் இடம் வகிக்கும் ராஜஸ்தானில் 200 உறுப்பினர்களில் 29 பேர் மட்டுமே பெண்கள். அடுத்து உள்ள ஆந்திராவில் 294 உறுப்பினர்கள் கொண்ட அவையில் 36 பேர் பெண்கள். மூன்றாவதாக மேற்கு வங்கத்தில் 294 உறுப்பினர்களில் 34 பேர் பெண்கள். சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் 10 சதவீதத்திற்கும் அதிகமாக 8 மாநிலங்களில் மட்டுமே பெண்கள் உள்ளனர். அவை மேற்கு வங்கம், ராஜஸ்தான், ஆந்திரம், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், பீகார், அஸ்ஸாம் மற்றும் இமாசலப்பிரதேசம் ஆகிய மாநிலங்களாகும்.

403 உறுப்பினர் கொண்ட உபி. மாநிலத்தில் 27 பேர் மட்டுமே பெண்கள். 40 பேர் கொண்ட கோவாவில் ஒரேஒரு பெண் உறுப்பினர்தான் உள்ளார்.

பைரெய்லி கலவரம் குறித்து நீதி விசாரணை ராஜ்யசபையில் உறுப்பினர்கள் கோரிக்கை

புதுடில்லி: உத்திரபிரதேச மாநிலத்தில் பைரெய்லியில் நடைபெற்ற மதக் கலவரம் குறித்து நீதிவிசாரணை நடத்தப்பட வேண்டும். மத்திய அரசு தலையிட்டு சட்டம் ஒழுங்கு நிலைமையை கட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்று பல்வேறு கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் ராஜ்ய சபையில் கோரிக்கை விடுத்தார்.

காங்கிரஸ், சமாஜ்வாதி மற்றும் பாஜக ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலவரத்தை ஒடுக்க மத்திய அரசு தவறிவிட்டது. மார்ச் 2ந்தேதி முதல் ஊரடங்கு சட்டம் பிறபிக்கப்பட்டுள்ளது என்று மாயாவதி அரசு மீது கடும் குற்றச்சாட்டுகளை கூறினார்.

கேள்வி நேரம் முடிவடைந்தும் சமாஜ்வாதி கட்சி உறுப்பினர் பேராசிரியர் ராம் கோபால் யாதவ் பேசுகையில் பைரெய்லி நீண்ட நாட்களாக ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் அன்றாட தேவைக்கு பொருட்கள் வாங்க முடியாமல் சிரமப்பட்டுகின்றனர். குறிப்பாக நோயாளிகள் மருத்துவ மனை செல்லவும், மருந்து வாங்கவும் சிரமப்படுகின்றனர் என்றார்.

பைரெய்லியில் பாதிக்கப்பட்ட மக்களை கவனிக்காமல் ஆளுங்கட்சி பேரணிக்கு வேலை செய்ய அரசு அதிகாரிகள் சென்றுவிட்டனர். இத்தகைய அவமான செயல்களை மத்திய வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருக்கக் கூடாது. மாநில அரசின் அறிக்கையைக் கோர வேண்டும். இத்துப் பிரச்சனையில் மத்திய அரசு தலையிட வேண்டும் என்றார் ராம்கோபால் யாதவ்.

காங்கிரஸ் உறுப்பினர் ராஹுல் ஆல்வி பேசுகையில், மதக்கலவரம் குறித்து நிதி விசாரணை நடத்த வேண்டும் ஆளுங்கட்சியின் வெள்ளி விழா கொண்டாடத்திற்கு மாநில அரசு ரூ.200 செலவிட்டதாக குற்றஞ்சாட்டினார்.

எதிர்க்கட்சி துணைத் தலைவர் எஸ்.எஸ்.அலுவாலியா பேசுகையில், மதக்கலவரம் நடைபெற்றது குறித்து நீதிவிசாரணை நடத்த வேண்டும். அந்த மாநாட்டில் இந்துக்களும் சீக்கியர்களும் மைனாரிட்டியாக இருந்து பெரும் அவஇக்குள்ளாயிருக்கிறார்கள் என்றார்.

பகுஜன் சமாஜ் கட்சி உறுப்பினர் பிரிஜேஸ் பதக் பேசுகையில், மாநில அரசின் சட்டம் ஒழுங்கு பிரச்சனையை குறித்து ராஜ்ய சபையில் விவாதிக்கக் கூடாது. உறுப்பினர்கள் பேசியதை அவை குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்றார்.

ராஜ்ய சபை துணைத் தலைவர் ரகுமான்கான் இதனை ஏற்க மறுத்த விட்டார்.

19ம் தேதி தேசிய திரைப்பட விருது

குடியரசுத் தலைவர் வழங்குகிறார்

புதுடில்லி: வரும் 19-ம் தேதி புது தில்லியில் நடைபெறும் விழாவில் 2008-ம் ஆண்டுக்கான 56-வது தேசிய திரைப்பட விருதுகளை வெற்றியாளர்களுக்கு குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் வழங்குகிறார். இந்த விழாவில் பிரபல சினிமா ஒளிப்பதிவாளர் விகேமூர்த்திக்கு தாதா சாகிப் பால்கே விருது வழங்கப்படுகிறது.

2008-ம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகள் இவ்வாண்டு ஜனவரி 23-ம் தேதி அறிவிக்கப்பட்டன. இயக்குனர் அனிருத் ராய் சௌத்திரி, இயக்குனர் மிர்ஜ் பாண்டே உள்ளிட்டவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன. தமிழில் 'நான் கடவுள்' படத்தை இயக்கிய இயக்குனர் பாலாவுக்கு ஸ்வர்ண கமல் பதக்கம் வழங்கப்படுகிறது.

'ஜோக்வா' என்ற மராத்தி படத்தில் நடித்த உடேந்திரா விமபேவுக்கு சிறந்த நடிகருக்கான விருதும், 'பேஷன்' என்ற இந்தி படத்தில் நடித்த பிரியங்கா சோப்ராவுக்கு சிறந்த நடிகைக்கான விருதும், 'ராக் ஆன்' என்ற இந்தி படத்தில் நடித்த அர்ஜுன் ராம்பாலுக்கு சிறந்த துணை நடிகருக்கான விருதும், 'பேஷன்' இந்தி படத்தில் நடித்த சங்கமா ரனவத்துக்கு சிறந்த துணை நடிகைக்கான விருதும், 'தாங்க்ஸ் மா' என்ற இந்தி படத்தில் மாஸ்டர் ஷாம்ஸ் படேலுக்கு சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான விருதும், 'ஜோக்வா' படத்தில் பின்னணி பாடிய ஹரிசரணுக்கு சிறந்த பின்னணி பாடகருக்கான விருதும் வழங்கப்படவுள்ளன.

வரதட்சணை சாவு அவமானகரமானது: மீரா குமார்

புதுடில்லி: வரதட்சணை காரணமாக பெண்கள் சாவது ஒரு அவமானகரமான விஷயம் என்றும் அது சமுதாயத்தின் ஒரு கும்பள்ளி என்றும் மக்களவைத் தலைவர் மீரா குமார் தெரிவித்துள்ளார். மக்களவையில் இந்தப் பிரச்சனைகள் குறித்து உள்துறை அமைச்சர் சிதம்பரத்தின் உறுதியான கருத்தினை மீரா குமார் பாராட்டினார்.

முன்னதாக மக்களவையில் பேசிய சிதம்பரம், இளம் மனைவிகளை வரதட்சணைக்காக காஷுக்கட்டுபவர்களுக்குத் தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

கற்பழிப்பு என்ற சொல்லுக்குப் பதிலாக பாலியல் வன்முறை என்ற சொல் சட்டத்தில் குறிப்பிடப்படும் என்று கூறிய அவர் கருணைக் கொலை பற்றியும் விளக்க மளித்துள்ளதாக சிதம்பரம் கூறினார்.

பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களிடம் விசாரணை அவரது வீட்டிலோ அல்லது அவர் விரும்பும் இடத்திலோ அவரது பெற்றோர் அல்லது உறவினர் முன்னிலையில் ஒரு பெண் காவல் துறை அதிகாரியால் நடத்தப்படும் என்று கூறிய சிதம்பரம், இது தொடர்பான வழக்குகளை பெண் நீதிபதிகள் உள்ள நீதிமன்றத்தில் தான் விசாரிக்கப்பட வேண்டும் என்று ஏற்கனவே உச்ச நீதிமன்றம் தெரிவித்ததை அவர் சுட்டிக் காட்டினார்.

முஸ்லீம்கள், தலித் கிறிஸ்துவர்களுக்கு இடஒதுக்கீடு: மார்க்சிஸ்ட் ஆதரவு

புதுடில்லி: முஸ்லீம்கள், தலித் கிறிஸ்துவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மார்க்சிஸ்ட் கட்சி ஆதரிக்கும் என்று பிருந்தா காரத் கூறினார்.

ரங்கநாத் மிஸ்ரா கமிஷன் அறிக்கையை அமல் படுத்த வேண்டும். தலித் கிறிஸ்துவர்கள், முஸ்லீம்களுக்கு தலித் மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் யாவும் வழங்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்திய பலமந்த்ரா முஸ்லீம் மஹாஸ், அகில இந்திய மியூ விகாஸ் சபா ஆகிய அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் நாடாளு மன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அவர்களிடையே மார்க்சிஸ்ட் கட்சி பொலிட் பீரோ உறுப்பினர் பிருந்தா காரத் பேசுகையில், ரங்கநாத் மிஸ்ரா கமிஷன் அறிக்கையை உடனே அமல்படுத்த வேண்டும். தலித் முஸ்லீம், தலித் கிறிஸ்துவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக் கையை மார்க்சிஸ்ட் கட்சி ஆதரிக்கும் என்று கூறினார். மத அடிப்படையிலான வேறுபாடுகளை காண்பது அரசியல் சட்டத்திற்கு எதிரானது என்று பிருந்தா காரத் குறிப்பிட்டார்.

ஐக்கிய ஜனதா கட்சித் தலைவர் அலி அன்வர் பேசுகையில் மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளை கடுமையாக கண்டித்தார்.

மாவோயிஸ்டுகள் ஆயுதக் குவியலை ஆந்திர போலீசார் கைப்பற்றினர்

ஹைதராபாத்: மாவோயிஸ்டுகள் பதுக்கி வைத்திருந்த ஆயுத குவியலை ஆந்திர போலிசார் கைப்பற்றினர். இதனை ஆந்திர போலீஸ் டிஜிபி கிரிஷ்குமார் தெரிவித்தார்.

மாவோயிஸ்டு தலைவர் கொண்டலா ரெட்டியின் வீட்டை சோதனையிட்ட போது கிடைத்த ஆவணங்கள் அடிப்படையில் இந்த ஆயுத குவியல் கைப்பற்றப்பட்டதாக கிரிஷ்குமார் தெரிவித்தார்.

மேற்கு கோதாவரி மாவட்டம் பெல்லி பாரு கிராமத்தில் ஒரு வீட்டிலிருந்து இந்த ஆயுதக்குவியல் கைப்பற்றப்பட்டது. பெரும் எண்ணிக்கையிலான ராக்கெட் லாஞ்சர்ஸ், வடிவமைக்கப்படாத ராக்கெட் லாஞ்சர்ஸ்கள் மற்றும் உதிரி பாகங்கள் என 3000க்கும் மேற்பட்ட ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. மக்களுக்கு ஏற்பட விருந்த பெரும் பாதிப்பு தவிர்க்கப்பட்டதாக கிரிஷ்குமார் தெரிவித்தார்.

மாவோயிஸ்டுகள் அமைதியான சூழ்நிலை நிலவும் கிராமங்கள், நகரங்களையே ஆயுதங்கள் சேகரிக்கும் இடமாக தேர்வு செய்கின்றனர். பொதுமக்கள் இது போன்ற ஆயுதங்கள் குவிக்கப்பட்ட இடங்கள் பற்றிய, அவர்களின் நடமாட்டம் குறித்தோ தகவல் அறிந்தால் போலீசுக்கு தெரிவிக்கும்படி கிரிஷ்குமார் வேண்டுகோள் விடுத்தார்.

ராஜ்ய சபாவிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட ஐக்கிய ஜனதா தள உறுப்பினர்கள் இசாஜ் அலி மற்றும் சுபாஷ் யாதவ் இருவரும் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள சிலை முன்பு அமர்ந்து மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.